பி.டி.கத்தரிக்காய்க்கு கர்நாடகம் தடை

First Published : 09 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 09 Feb 2010 01:56:37 AM IST



பெங்களூர்,பிப்.8: மரபணு மாற்றப்பட்ட (பி.டி.) கத்தரிக்காய்க்கு தடை விதிக்கப்படும் என்று கர்நாடக தோட்டக் கலைத் துறை அமைச்சர் உமேஷ் கத்தி தெரிவித்தார்.

பெங்களூரில் செய்தியாளர்களுக்கு திங்கள்கிழமை பேட்டியளித்த அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை கர்நாடகத்தில் வர்த்தக ரீதியில் சாகுபடி செய்ய அரசு தடை விதிக்கும். இதுதொடர்பாக மத்திய அரசுக்கு ஏற்கெனவே கடிதம் எழுதிவிட்டோம்.

மத்திய அரசின் பதிலுக்காக காத்திருக்கிறோம். புதன்கிழமைக்குள் பதில்

அளிப்பதாக மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். மரபணு மாற்ற கத்தரிக்காயை இந்தியாவில் அனுமதிக்கும் முடிவை கைவிட வேண்டும் என மத்திய அரசிடம் முதல்வர் எடியூரப்பாவும் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளார். மரபணு மாற்ற கத்தரிக்காயால் ஏற்படும் சாதக-பாதகங்கள் குறித்து உடனடியாக முடிவுக்கு வந்துவிட முடியாது. அதுபற்றி நீண்ட ஆராய்ச்சி தேவை. அதன் பிறகே அதுபற்றி ஒரு முடிவுக்கு வர முடியும். எனவே, இந்தப் பிரச்னையில் மத்திய அரசு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்துவிடக் கூடாது என்றார் அவர். மரபணு மாற்ற கத்தரிக்காயை பயன்படுத்தக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பாகவத் ஞாயிற்றுக்கிழமை கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விலை உயர்வு விரைவில் கட்டுக்குள் வரும்: பிரணாப் முகர்ஜி

First Published : 09 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 09 Feb 2010 01:56:26 AM IST

கோல்கத்தா,பிப்.8: அத்தியாவசியப் பொருள்களின் விலையுர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் விலையுயர்வு விரைவில் கட்டுக்குள் வரும் என்றார் மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

மனித முன்னேற்றம் மற்றும் சர்வதேச உறவுக்கு பிரணாப் முகர்ஜியின் பங்களிப்பைப் பாராட்டி அவருக்கு ஆசியாடிக் அமைப்பு சார்பில் இந்திரா காந்தி தங்கப் பட்டயம் வழங்கப்பட்டது. இதற்கான விழா கோல்கத்தாவில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் பட்டயத்தைப் பெற்றுக்கொண்டு உரைநிகழ்த்துகையில், விலையுர்வு விரைவில் கட்டுக்குள் வரும் என்றார் பிரணாப் முகர்ஜி.

மேலும் அவர் பேசியதன் சுருக்கம்: அத்தியாவசியப் பொருள்களின் தேவைக்கும், விநியோகத்துக்கும் இடையே இடைவெளி நிலவுகிறது. இதுவே விலையுயர்வுக்கு முக்கியக் காரணம். இதை சிலர் சாதகமாக்கிக் கொண்டுள்ளனர். மக்களின் தேவைக்கு ஏற்ப பொருள்கள் விநியோகிக்கப்பட்டுவிட்டாலே தானாக விலையுயர்வு கட்டுக்குள் வந்துவிடும்.

இதனால் பொருள்களின் தேவைக்கும், விநியோகத்துக்கும் இடையேயான இடைவெளி விகிதத்தை சமநிலைப்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

விலையுயர்வைக் கட்டுக்குள் கொண்டுவர உயர் நிலைக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கமிட்டி, சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வை உன்னிப்பாகக் கவனித்து, அதைக் கட்டுப்படுத்துவதற்கான யோசனை வழங்கி வருகிறது. கமிட்டி அளிக்கும் யோசனைக்கேற்ப மத்திய அரசும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் விலையுயர்வு விரைவில் கட்டுக்குள் வந்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது என்றார் பிரணாப் முகர்ஜி.

அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்த சமீபத்தில் மத்திய அரசு உயர் நிலைக் கமிட்டி ஒன்றை அமைத்தது. அதில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வேளாண் அமைச்சர் சரத் பவார், மத்திய திட்டக்கமிஷன் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா மற்றும் 10 மாநில முதல்வர்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நெல் கொள்முதல் நிலையம்: ஆட்சியர் உறுதி

First Published : 09 Feb 2010 08:22:34 AM IST
Last Updated :

அரியலூர், பிப். 8: அரியலூர் வட்டாட்சியர் கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெற்ற மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

குருவாடி ஊராட்சித் தலைவர் வீர. ரவி மற்றும் காங்கிரஸ் கட்சியினருடன் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு வந்திருந்த அரியலூர் சட்டப்பேரவை உறுப்பினர் பாளை.து. அமரமூர்த்தி, திருமானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த குருவாடி கிராமத்தில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குருவாடியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்வதாக மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் தெரிவித்தார்.

### இயற்கை விவசாயத்தை வலியுறுத்தி கருத்தரங்கம்

First Published : 08 Feb 2010 10:05:58 AM IST
Last Updated : 08 Feb 2010 10:43:11 AM IST

திண்டுக்கல், பிப். 7: இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, திண்டுக்கல் - திருச்சி சாலையில் சனிக்கிழமை மாலை விவசாயிகள் பேரணியும், இதைத் தொடர்ந்து கருத்தரங்கமும் நடைபெற்றது.

கடந்த 60 ஆண்டு கால அளவில் உலக விவசாய, பொருளாதாரத்தில் ரசாயன விவசாயம் வேரூன்றி விட்டதைத் தொடர்ந்து, எதிர் விளைவுகளை வெளிப்படையாக உணரும் நிலை உருவாகி உள்ளது. ரசாயன விவசாயம் இந்தியப் பொருளாதாரத்தை நலிவடையச் செய்வதும், விளை நிலங்களில் உள்ள உயிரினங்களை அழித்தல், நிலத்தடி நீர் மாசுபடுதல், உட்கொள்ளும் உணவுப் பொருள்களில் நச்சுத்தன்மை அதிகரித்தல் போன்ற தீய விளைவுகள் உருவாகி வருகின்றன.

எனவே, மீண்டும் இயற்கை விவசாயத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி, திண்டுக்கல் இயற்கை வேளாண் இந்தியா சார்பில் விவசாயப் பேரணி திருச்சி சாலையில் நடைபெற்றது. பேரணியில், மாட்டு வண்டியில் உரல், அம்மி, உலக்கை போன்ற இயற்கை உணவுப் பழக்கவழக்கத்தை வலியுறுத்தும் வகையில் காட்சிப் பொருள்கள் எடுத்து வரப்பட்டன.

இப்பேரணியை, தமிழ்நாடு கல்லுடைப்போர் சங்க நிறுவனத் தலைவர் எஸ்.பி. ஞானமணி, திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கத் தலைவர் என். அர்த்தநாரி தொடங்கி வைத்தனர்.

பின்னர் நடைபெற்ற கருத்தரங்குக்கு, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஜி. பங்கஜம் தலைமை வகித்துப் பேசினார். இயற்கை

வேளாண் இந்தியா மண்டல அமைப்பாளர் ஏ. கிரிகோரி முன்னிலை வகித்தார்.

தமிழகம், புதுச்சேரி இயற்கை வேளாண் இந்தியாவின் தலைவர் பரிசுத்தம் ஜான்பிரிட்டோ துவக்க உரையாற்றினார். காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக

வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை பேராசிரியர் டி.டி. ரெங்கநாதன் கருத்துரையாற்றினார்.

முன்னதாக, இயற்கை வேளாண் மண்டல அமைப்பாளர் ஜி.எப். விசுவாசம் வரவேற்றார். துணைச் செயலர் பி.எஸ். போஸ் நன்றி கூறினார்.

### நெல் கொள்முதல் இலக்கு 16 லட்சம் மெட்ரிக் டன்

First Published : 09 Feb 2010 08:48:31 AM IST
Last Updated :

தஞ்சாவூர், பிப். 8: தமிழகத்தில் நிகழாண்டில் 16 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாநில உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு.

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் உள்ள திறந்தவெளி நுகர்பொருள் வாணிபக்கழகச் சேமிப்புக் கிடங்கு, சடையார்கோவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் திங்கள்கிழமை நேரடி ஆய்வு மேற்கொண்ட அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் இதுவரை மூன்று லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1,165 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக 24,000 டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 8,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நிகழாண்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்லாமல் காஞ்சிபுரம், விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

அங்கெல்லாம் விவசாயிகள் கொண்டு வரும் நெல், முழுமையாகக் கொள்முதல் செய்யப்படுகிறது.

கொள்முதல் பணி தடையின்றி நடைபெறுவதற்காக சாக்குகள், லாரி, பணம் உள்ளிட்ட தேவையான பொருள்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

முதல்வர் கருணாநிதி ஆட்சியில் ஏழை, எளிய மக்களுக்குத் தட்டுப்பாடின்றி ஒரு கிலோ அரிசி ரூ.1-க்கு வழங்கப்படுகிறது.

நிகழாண்டில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகரித்துள்ளதால் விலைவாசி குறையும். விலைவாசியைக் குறைக்க முதல்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்றார் வேலு.

உணவுப் பொருள் வழங்கல் துறைச் செயலர் சண்முகம், நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் டி. பிச்சையா ஆகியோர் உடனிருந்தனர்.

### ஜெயலலிதாவுக்கு கரும்பு விவசாய சங்கங்கள் கூட்டமைப்பு நன்றி

First Published : 09 Feb 2010 02:00:01 AM IST
Last Updated :

திருவண்ணாமலை, பிப்.8: கரும்பு விலையை உயர்த்தக் கோரி விழுப்புரத்தில் ஜெயலலிதா நடத்தவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் உள்ள சர்க்கரை ஆலைகளின் அனைத்து கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயற்குழுக் கூட்டம் திருவண்ணாமலையில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. மாநில தலைவர் வேட்டவலம் கே.மணிகண்டன் தலைமை தாங்கினார். தனியார் சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாய சங்கத் தலைவர் பி.வெங்கடபதி ரெட்டியார் வரவேற்றார்.

கரும்பு டன்னுக்கு ரூ.2500 கோரி அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதா தலைமையில் வரும் 13-ம் தேதி விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம் நடக்கிறது. இதற்காக கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் இருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் பங்கேற்று முழு ஆதரவு தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் லாபத்தில் இயங்கும் வகையில் செயல்பட அறிவுரை**

First Published : 09 Feb 2010 08:46:58 AM IST
Last Updated :

திருச்சி, பிப். 8: நஷ்டத்தில் செயல்படும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அடுத்த ஆண்டில் லாபத்தில் இயங்கும் வகையில் செயல்பட வேண்டும் என, செயலர்களுக்கு அறிவுரை வழங்கினார் உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலர் க. சண்முகம்.

திருச்சியில் திங்கள்கிழமை நடைபெற்ற மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கடன் சங்கங்களில் நஷ்டத்தில் இயங்கி வரும் கடன் சங்கங்களை மேம்படுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

"விவசாயிகளின் நலனுக்காக கிராமப்புறங்களில் இந்த வங்கிகள் தொடங்கப்பட்டன. இதன்மூலம் பயிர்க் கடன் வழங்குவது மட்டுமன்றி, விவசாயிகளின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றும் ஒரு மையமாகவும் இந்த வங்கி செயல்பட வேண்டும். ஆண்டுதோறும் செயல் திட்டத்தை வகுத்துக் கொண்டு அவற்றைச் செயல்படுத்த வேண்டும்.

விவசாயக் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு கடன் வழங்குதலில் முன்னுரிமை அளிக்க வேண்டும். விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்வதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். டிராக்டர் உள்ளிட்ட விவசாய இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு சங்கத்தின் செயல்பாட்டையும் கூட்டுறவு வங்கித் தனி அலுவலர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். நஷ்டத்தில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் வரும் 2011-ம் ஆண்டில் லாபத்தில் இயங்கும் அளவுக்கு செயலர்கள் பணி அமைய வேண்டும்' என்றார் சண்முகம்.

இந்தக் கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் இராம. ஜெயம்பாண்டியன், மத்தியக் கூட்டுறவு வங்கி தனிஅலுவலர் ஆர். பிருந்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கடலை சாகுபடி பயிற்சி**

First Published : 09 Feb 2010 08:25:26 AM IST
Last Updated :

பொன்னமராவதி, பிப். 8: புதுக்கோட்டை மாவட்டம், செம்பூதி ஊராட்சியில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கடலை சாகுபடி பயிற்சி திங்கள்கிழமை அளிக்கப்பட்டது.

செம்பூதி ஊராட்சி மன்றத் தலைவர் பி. மாணிக்கம் தலைமை வகித்து, பயிற்சியைத் தொடக்கிவைத்தார். பொன்னமராவதி வேளாண் அலுவலர் வி. சாந்தி, உதவி வேளாண் அலுவலர்கள் எம். மணிமுத்து, ஆ. மலர்விழி ஆகியோர் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் கலந்து கொண்ட 50 விவசாயிகளுக்கு கடலை சாகுபடி குறித்த பயிற்சிக் கையேடு, வேம்பு சார்ந்த மருந்துகள் வழங்கப்பட்டன.

ஊராட்சி உறுப்பினர் பி. மூக்கையா வரவேற்றார். எழுத்தர் பி. கோபால் நன்றி கூறினார்.

**விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

First Published : 09 Feb 2010 03:41:57 AM IST
Last Updated :

திருநெல்வேலி, பிப். 8: பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்கக் கூடாது என திருநெல்வேலியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சந்திப்பு சிந்துபூந்துறையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, சங்கத்தின் மாவட்டச் செயலர் ஆர். கருணாநிதி தலைமை வகித்தார்.

சி.ஐடி.யூ. மாவட்டச் செயலர் ஆர். கருமலையான், பி. ஜெயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மரபணு கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்கக் கூடாது என கோஷங்கள் எழுப்பப்பட்டன. சங்க நிர்வாகிகள் டி. கணபதி, எம்.எஸ். நல்லசாமி, எஸ்.பி. கண்ணன், எம். ராமகிருஷ்ணன், தாமோதரன், கே. முத்துராஜ் உள்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**பனைத் தொழிலை விவசாயத் தொழிலாக அறிவிக்க வலியுறுத்தல்**

First Published : 09 Feb 2010 08:36:23 AM IST
Last Updated :

பொறையாறு, பிப். 8: பொறையாறில் பனைத் தொழில் விவசாயத் தொழிலாக அறிவிக்க வலியுறுத்தி பொறையாறில் நடைபெற்றநாடார் மகாஜன சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1910-ம் ஆண்டு பொறையாரில் நாடார் மகாஜன சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் நூற்றாண்டை முன்னிட்டு தொடக்க விழா மாநாடு பொறையாறில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நாடார் மகாஜன சங்கத் தலைவர் ரத்தினசாமி நாடார் தலைமை வகித்தார். பொதுச் செயலர் ஜி.கரிக்கோல் ராஜ் மாநாட்டின் நோக்கங்களை விரிவாக எடுத்து கூறினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பனைத் தொழிலை விவசாயத் தொழிலாக அறிவிக்க வேண்டும். சங்கத்திற்கென தனி வளைதளம் அமைக்க வேண்டும். அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுக்கு என தனிப் பல்கலைக்கழகம் தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் நாடார் மகாஜன சங்கப் பொறுப்பாளர்கள் என்.ஆர்.தனபாலன்,கே.வெற்றிராஜன்,ஏ.சி.சி.பாண்டியன்,நல்லதம்பி, பி,டி.அருணாச்சலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேளாண் தொழில்நுட்ப வார விழா தொடக்கம்**

First Published : 09 Feb 2010 08:24:16 AM IST
Last Updated :

பெரம்பலூர், பிப். 8: பெரம்பலூர் சமூக சேவை சங்க கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி மற்றும் வேளாண்மைத் தொழில்நுட்ப வார தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

பிப்.8 முதல் 12-ம் தேதி வரை நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமில், பருத்தி தொழில்நுட்பங்கள், செம்மை நெல் சாகுபடி, முந்திரி சாகுபடி, துல்லிய பண்ணை முறையில் கரும்பு சாகுபடி, கால்நடைப் பராமரிப்பு தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி மற்றும் விவசாயிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

விழாவில் பயிற்சி முகாமை தொடக்கிவைத்து, மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் பேசியது:

விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், மாவட்ட நிர்வாகம் சார்பில் செய்து தரப்படும். நிலத்தையும், அதை நேசிக்கும் மனிதனையும் பாராட்ட வேண்டும்.

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்னைகளை, மாதம்தோறும் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவித்து பயனடையலாம் என்றார் அவர்.

விழாவுக்கு இந்தியேளாண் ஆராய்ச்சிக் கழக உதவிப் பொது இயக்குநர் டி.பி. ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன், பெங்களூர் 8-வது மண்டல திட்ட இயக்குநர் எஸ்.பிரபுதாஸ், புதுதில்லி தேசிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் ஓ.எம். பாம்பவாலே ஆகியோர் வளர்ந்து வரும் வேளாண் தொழில்நுட்பம் குறித்து பேசினர்.

இதில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்க இயக்குநர் முனைவர் பி. கலைச்செல்வன், பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் ஜி.ஜேம்ஸ் பிச்சை, வேளாண்மை இணை இயக்குநர் செ.சிவக்குமார், வேளாண்மை துணை இயக்குநர் வே.விஜயகுமார், வட்டார விவசாய ஆலோசனைக் குழுத் தலைவர் எஸ். செல்லமுத்து, ஒன்றியக் குழுத் தலைவர்கள் க. முத்துகண்ணு, அழகு. நீலமேகம், மகாதேவி ஜெயபால், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப அலுவலர் சி. சங்கர், திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு. வரதராசன் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வேளாண்மை இணை இயக்குநர் வெ.ராதாகிருஷ்ணன் வரவேற்றார். ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

தினமலர்

## விலைகள் கட்டுக்குள் வரும்: பிரணாப் திட்ட வட்டம்

பிப்ரவரி 09,2010,00:00 IST



கோல்கட்டா: "அதிகரித்துவரும் விலை உயர்வு கட்டுப்படுத்தப்படும்' என, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார். கோல்கட்டாவில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்து மத்திய அரசு தீவிரமாக யோசித்து வருகிறது. மிக விரைவில், விலை உயர்வுகள் கட்டுப்படுத்தப்படும். பொருட்களின் தேவை மற்றும் வினியோகம் ஆகியவற்றுக்கிடையே சமநிலையற்ற தன்மை நிலவுவதை மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது. சிலர், இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். எனவே, வினியோகத்தை அதிகரிக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது.

மக்கள் பயன் பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, இறக்குமதி மற்றும் வரி விதிப்பில் சலுகைகள், பொது வினியோகத்தை முறைபடுத்தியது போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார். இதற்கிடையே நிதிப் பற்றாக்குறையை பொறுத்தவரை, இந்த ஆண்டை விட, அடுத்த ஆண்டு குறைவாக இருக்கும் என, திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா தெரிவித்துள்ளார். மொத்த வளர்ச்சி 7.2 சதவீதம் இருக்கும் என்று வந்துள்ள மதிப்பீடு நம்பிக்கை தருகிறது என்றார்.

ஷாருக் கானுக்கு ஆதரவு: "ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்கலாம் என, நடிகர் ஷாருக் கான் தெரிவித்ததில் எந்த தவறும் இல்லை; இந்திய அரசியலமைப்பு சட்டப்படி, கருத்து சுதந்திரம் என்பது ஒருவரது அடிப்படை உரிமை. இதை யாரும் மறுக்க முடியாது' என, பிரணாப் முகர்ஜி கூறினார்.

# பன்னாட்டு நிறுவன ஆய்வுக் கூடங்களின் எலிகளா இந்தியர்கள்?

- நமது நிருபர் -

சாமானியனின் அறிவுக்கெட்டாத சில விஷயங்கள் அவ்வப்போது நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவை தெளிவாக்கப்படாமலேயே அவன் மீது திணிக்கப்படுகின்றன என்பது தான் கசப்பான உண்மை. தற்போது, விவசாயிகள் மத்தியில் தகித்துக் கொண்டிருக்கும் மரபணு மாற்ற பி.டி., கத்தரிக்காய் விவகாரமும் இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது.

'மண்ணுக்கடியில் இருக்கும் பாக்டீரியாவிலிருந்து எடுக்கப்படும் மரபணுவைக் கொண்டு தயாரிக்கப்படும் விதையிலிருந்து வரும் கத்தரிச் செடியின் காய், பூ, இலை, தண்டு என எதைக் கடித்தாலும் புழு செத்து விடும் அளவுக்கு செடி முழுவதும் விஷம் நிறைந்திருக்கும். இதுதான் பி.டி., தொழில்நுட்பம்' என, அறிவியலின் அடிப்படையிலிருந்து பேசுகின்றன விவசாய சங்கங்கள்.

ஆனால், 'இது அறிவியல், தொழில்நுட்பம். இதெல்லாம் விவசாயிகளுக்குப் புரியாது; இதனால் பலன் அதிகம்னு தெரிஞ்சா எந்த சங்கம் சொன்னாலும் விவசாயிகள் கேட்க மாட்டார்கள். இதத்தான் உபயோகப்படுத்து வாங்க... இப்ப போராடறவங்க, விவசாயிகளே கிடையாது...' என, விவசாயப் பல்கலை தலைமை பேசுகிறது.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துவது குறித்த விவகாரம், தேசிய அளவில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. தற்போது விவாதப் பொருளாகியிருக்கும் கத்தரிக்காய் தான், மரபணு மாற்றப்பட்ட முதல் உணவுப் பொருளாகும்.

கத்தரியில், 'பேசில்லஸ் துரிஞ்சினியஸ்' என்னும் பாக்டீரியாவிலுள்ள விஷத்தை உருவாக்கும் தன்மையுடைய மரபணு, கத்தரி விதையில் செலுத்தப்படுகிறது. கத்தரிச் செடியில் உள்ள இந்த விஷம், அதைச் சாப்பிடும் சிறிய புழு, பூச்சி, பட்டாம்பூச்சி உள்ளிட்டவற்றை அழிக்கும் தன்மை வாய்ந்நது.

அதுவும், தாவரம் அல்லாத ஒன்றை (பாக்டீரியாவின் மரபணு) கத்தரிக்காய்க்குள் புகுத்திச் செய்யும் தொழில்நுட்பம் என்பதால், இது விவசாயிகளையும், நுகர்வோரையும் வெகுவாகக் குழப்பியுள்ளது. இந்த உயிரணு மாற்றங்கள் அந்த தாவரத்தில் பல ரசாயன மாற்றங் களை ஏற்படுத்தி, அதனுடைய செயல்பாட்டில் மாறுதலை உருவாக்கும்.

**கண்ணையன் (உறுப்பினர், தென்னிந்திய விவசாய இயக்கங்கள் ஒருங்கிணைப்புக் குழு):**

மக்கள் வரிப்பணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளாகச் செயல்படுகின்றன. கத்தரிக்காய் நம் நாட்டின் சொத்து என்பதை மறந்து, தொழில்நுட்பம் என்ற பெயரில், நமது விவசாயத்தை படிப்படியாக பன்னாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் முயற்சி நடந்து கொண்டிக்கிறது.

அமெரிக்க விதை நிறுவனமான மான்சான்டோவின் கண்டுபிடிப்பு தான் இந்த மரபணு மாற்றத் தொழில்நுட்பம். இதன் உரிமத்தைப் பெற்றுள்ள இந்திய நிறுவனமான மஹிகோ நிறுவனம், இந்த தொழில்நுட்பம் குறித்து பெரிதாக ஆராய்ச்சி எதுவும் செய்யாமலேயே நமது விவசாயிகளிடம் திணிக்கப் பார்க்கிறது.

இந்த பி.டி., தொழில்நுட்பத்தில், மருந்து, கத்தரிக்காயின் உள் பகுதிவரை ஊடுருவிச் சென்று தாக்கும் தன்மையுடையது. இதனால், பூச்சி மருந்தின் விஷத்தன்மை காயைப் பாதிப்பதால், அதை உட்கொள்வோருக்கு அலர்ஜி, மலட்டுத்தன்மை, கேன்சர் உள்ளிட்ட நோய்கள் தாக்கும் வாய்ப்புள்ளது.



இதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், இந்த குறிப்பிட்ட மரபணு இந்த ஒரு வகை புழுவை மட்டுமே அழிக்கும். இது தவிர கத்தரியைத் தாக்கக் கூடிய வேறு 7, 8 வகையான நோய்களுக்கு அதற்குண்டான மருந்தை அடித்தே ஆகவேண்டும். அதிக விளைச்சல் கொடுக்கக் கூடிய தன்மையும் இதற்கில்லை.

எனவே, இயற்கையாக விளைவிக்கப்படும் காய் மூலம் விவசாயியே விதை எடுத்து, பாதுகாத்து திரும்ப விதைக்கும் முறை இருக்கையில், செயற்கையாக உண்டாக்கப்படும், பாதுகாப்பற்ற மரபணு மாற்ற விதைகள் எதற்கு?

**வி.செல்லமுத்து (தலைவர், உழவர் உழைப்பாளர் கட்சி):**

பி.டி., கத்தரிக்காய் தொழில்நுட்பத்தால் பூச்சித் தாக்குதல் இருக்காது, விளைச்சலும் அதிகமிருக்கும். இதுதான், மான்சான்டோ நிறுவனமும், மஹிகோ நிறுவனமும் சொல்வது.

இதற்கு முன்பும் இப்படிச் சொல்லித்தான், பி.டி., பருத்தியை அறிமுகம் செய்தனர். விவசாயிகளும் இவர்கள் சொன்னதை நம்பி தங்களது சொந்த நிலங்களிலும் பெருமளவு குத்தகைக்குப் பிடித்தும் பி.டி., பருத்தியை பயிரிட்டனர்.

ஆனால், ஆந்திராவிலும், விதர்பாவிலும் இந்நிறுவனங்கள் சொன்னது போல் எதுவுமே நடக்கவில்லை. பி.டி., பயிரிடப்பட்ட முதல்முறை மட்டுமே ஓரளவு மகசூல் கிடைத்தது. தொடர்ந்து பயிர் செய்தபோது மகசூலும் குறைந்து, மண்ணும் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கடனில் மூழ்கி, தற்கொலை சம்பவங்கள் நடந்தேறின.

ஏற்கனவே புழக்கத்தில் உள்ள வீரிய ஒட்டு விதைகளாலும், ரசாயன உரங்களாலும், டாக்டர்களால் கூட கண்டு பிடிக்க முடியாதவாறு மர்மக் காய்ச்சல், ஒவ்வாமை என மனித இனம் பல வித நோய்த் தாக்குதலைச் சந்தித்து வருகிறது.

நாளடைவில் பாரம்பரிய விதைகளும் அழிந்து, மான்சான்டோ நிறுவனமும் விதை வினியோகத்தை நிறுத்தும் நிலை வந்தால், அது நமது நாட்டு விவசாயத்துக்கே பெரும் அச்சுறுத்தலாய் அமையும்.

'இந்த மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் முற்றிலும் முரணானது. எந்த மரபணுவும் தனியாக ஒரு செயலைச் செய்வதில்லை, கூட்டாகத்தான் இயங்க முடியும்; வெட்டி ஒட்டி ஒன்றின் பண்பை மற்றொன்றில் புகுத்துவது எதிர்மறையான விளைவுகளைத் தரக்கூடும் இந்த டெக்னாலஜியே தவறு' என, ஆணித்தரமாகக் கூறிய இங்கிலாந்து நாட்டின் உயிரி தொழில்நுட்பம் மற்றும் மரபியல் பேராசிரியர் டாக்டர் மைக்கேல் அண்டோன்யாவின் ஆய்வுக் கட்டுரையுடன் தான் துவங்கியது, டில்லியில் நடந்த மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களால் ஏற்படக் கூடிய நலப் பிரச்னைகள் குறித்த கருத்தரங்கு.

'மொத்தமும் அபத்தம்; அப்படியும் ஏனிந்த அவசரம்' எனக் கேள்வி எழுப்புகிறார், இந்திய மரபணு மாற்று பொறியியல் அங்கீகாரக் குழுவின் அறிக்கையைப் படித்த பிரெஞ்சு விஞ்ஞானி செரலினி.

'புழு, பூச்சி, ஒட்டை என எதுவுமே இல்லாமல் காட்சியளிக்கும் பி.டி., கத்தரியில் ஆயிரம் மடங்கு பூச்சித் தெளிப்பான்களை விட அதிகமான பி.டி., நஞ்சை இது கொண்டிருக்கக் கூடும்' என, அமெரிக்க சால்க் இன்ஸ்டிடியூட் விஞ்ஞானி டேவ் ஷூபெர்ட் கூறியிருக்கிறார்.

ஆந்திரா மற்றும் மத்திய பிரதேசத்தில் பி.டி., பருத்தியை உட்கொண்ட ஆடுகள் இறந்துள்ளன.

ஆஸ்திரியாவில், மரபணு மாற்றப்பட்ட மக்காச் சோளப் பயிர்களை 10 ஆண்டுகளுக்கு மேல் எலிகளுக்குக் கொடுக்கப்பட்டதில் அவற்றுக்கு இனப்பெருக்கச் சிக்கல், மலட்டுத் தன்மை உண்டானது.

மரபணு மாற்ற சோயாவைச் சாப்பிட்ட தாய் எலிகளுக்குப் பிறந்த குட்டிகளின் இறப்பு விகிதம் 6 மடங்கு அதிகரித்துள்ளதாக ரஷ்ய அறிவியல் கழகம் கூறியுள்ளது. ஆஸ்திரேலியாவில் பி.டி., பட்டாணியை உட்கொண்ட எலிகளுக்கு நுரையீரல் நோய் ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்சில் பி.டி., பயிர் வயல்களுக்கு அருகில் வசிப்போருக்கு, பயிர்களில் மகரந்தம் உதிரும் நேரத்தில் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக பி.டி., சோளத்தை உட்கொண்ட எலிகளின் சிறுநீரகங்கள் சிறுத்துப் போனதை மான்சான்டோ நிறுவனமே ஒப்புக் கொண்டுள்ளதாக வேளாண் பல்கலை ஆராய்ச்சியாளர் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

இப்படி எவ்வளவோ ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் ஆதாரப்பூர்வமான வாதங்களை ஆணித்தரமாக எடுத்து வைத்துள்ளனர். ஆனால்... மரபணு மாற்றத் தொழில் நுட்பத்தால், சந்ததியற்ற சமுதாயம் சந்தடியில்லாமல் உருவாகும், நோயற்ற வாழ்வுக்கு சாத்தியம் குறைவு, நாளைய உணவுக்கு அன்னியரிடம் கையேந்த வேண்டி வரும் என, 'மனசாட்சியுள்ள' விஞ்ஞானிகளும், சமூக ஆர்வலர்களும், விவசாயிகளும் வேதனையுடன் போராடிக் கொண்டிருக்க...

இத்தனை ஆர்ப்பாட்டங்களும் அர்த்தமற்றவை; விவசாயிகளின் நலன்(!) கருதியே பி.டி., அனுமதிக்கப்படுகிறது என்று அரசு இயந்திரங்களைச் சார்ந்த விஞ்ஞானிகள்(?) மட்டும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

கேரளாவிலும் கர்நாடகத்திலும் மக்கள் நலன் கருதி பி.டி.,க்கு தடை விதிக்கப்பட்டிருக்க தமிழக முதல்வர் மட்டும், 'உத்தரவு வரும் வரை பி.டி.,யை அனுமதிக்கக் வேண்டாம்' என கேட்டுக் கொண்டிருக்கிறார்.

எது எப்படியோ, அன்னிய நாடுகளில் எலிக்கும், ஆட்டுக்கும், முயலுக்கும் கொடுத்துச் சோதித்துப் பார்த்ததை இந்தியாவில் மனிதர்களுக்குக் கொடுத்துச் சோதித்துப் பார்க்க அன்னிய சக்திகள் முயல்கின்றன என்பது மட்டும் இங்கு தெளிவாகிறது.

இந்திய மக்களை அன்னிய பன்னாட்டு ஆய்வுக் கூடங்களின் எலிகளாக்க நமது ஆட்சியாளர்களும் முடிவு செய்து விட்டனர் என்பதுதான் இங்கு துரதிருஷ்டம்.

# கோவையில் பருத்தி விற்பனை மையம் துவக்கியது இந்திய பருத்திக் கழகம்

**கோவை, பிப். 9–**

இந்திய பருத்திக் கழகம், கோவை, ராஜபாளையத்தில் இரண்டு விற்பனை மையங்களை துவக்கியுள்ளது. இந்த மையங்களால், தமிழகத்தில் உள்ள மில்கள், எளிதாக பருத்தியை பெற இயலும்.

இந்திய அளவில், குஜராத், மகராஷ்டிரா போன்ற மாநிலங்களில் பருத்தி அதிகம் விளைகிறது. நாட்டின் பருத்தி உற்பத்தி 286 லட்சம் பேல்கள். ஆனால், 40 சதவீத மில்கள் தமிழகத்தில் மட்டுமே உள்ளது. இந்திய அளவில் பருத்தியை அதிகம் பயன்படுத்தும் மாநிலமாக உள்ள தமிழகத்தில், பருத்தி உற்பத்தி ஐந்து லட்சம் பேல்கள் மட்டுமே.

ஆண்டுக்கு நூறு பேல்கள் அளவிற்கு தமிழக மில்கள் பயன்படுத்துகின்றன. இந்த பருத்தி, வட மாநிலங்களில் இருந்து, தமிழ்நாட்டிற்கு தரை வழி போக்குவரத்தில் வந்து சேருகின்றன. நீண்ட துாரத்திலிருந்து வருவதால் அதற்கான வாடகை, வரி விதிப்பு போன்றவற்றால், மில்கள் சிரமத்திற்குள்ளாகி வருகின்றன. போக்குவரத்து செலவும், வரியும் சேர்ந்து 10 சதவீத அளவிற்கு மூலப்பொருள் விலை யேற்றம் ஏற்படுகிறது.

இதை தவிர்க்க, தமிழ்நாட்டில் இந்திய பருத்திக் கழகம், பருத்தியை விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என மில்கள் வலியுறுத்தி வந்தன.

இதையடுத்து, கோவை, ராஜபாளையம் ஆகிய இடங்களில் இந்திய பருத்திக் கழகம், விற்பனை மையங்களை (சேல்ஸ் டிப்போ) துவக்கியுள்ளது.

கோவை, ராஜபாளையம் பகுதியில் மில்கள் அதிக அளவில் உள்ளன. இவை, சிறு, நடுத்தர மில்களாக உள்ளன. இவை அதிக அளவில் பயன்படுத்த வசதியாக இருக்கும்.

இந்த மில்களுக்கு மூலப்பொருள், நேரடியாகவே பருத்திக் கழகம் சப்ளை செய்யும். தமிழக மில்கள் இனி பருத்தியை தேடி அலைய வேண்டியதில்லை. இந்த விற்பனை மையத்திலேயே அனைத்து ரக பருத்தியும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

மில்கள் ஒட்டுமொத்தமாக வாங்கி இருப்பு வைக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவைக்கு ஏற்ப அவ்வப்போது வாங்கிக் கொள்ள முடியும். குறைந்தபட்சம் 25 பேல்கள், 50 பேல்களாக வாங்கலாம். முன்பணம் செலுத்தும் மில்களுக்கு சலுகை உண்டு.

பருத்தி வாங்குவோர், முன்பே பரிசோதனை செய்யப்பட்ட பருத்தியை வாங்க முடியும்.

இந்திய பருத்திக் கழகத்தால் விற்பனை செய்யப்படும் இந்த பருத்திக்கு தமிழக அரசு 'வாட்' வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது. போக்குவரத்து செலவு, கையாளுவதற்கான செலவு, மத்திய அரசு கலால் வரி ஆகிய வற்றிற்கும் சேர்த்து இரண்டு சதவீதம் மட்டுமே மில்கள் கூடுதலாக செலுத்த வேண்டும். மில்களுக்கு, நேரம், பணம், போக்குவரத்து செலவு மிச்சப்படுகிறது. அதோடு, சேமிப்பு கிடங்கிற்கான கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

இந்த விற்பனை மையத்தால் சிறு, நடுத்தர மில்கள் பெரிதும் பயன்பெறும். மேலும் விபரங்களை, www.cotcorp.gov.in என்ற வெப்சைட்டில் அறியலாம். இந்த பருத்தி விற்பனை மையம் நேற்று முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

இத்தகவலை, இந்திய பருத்திக் கழகம் தெரிவித்துள்ளது.

# மரபணு கத்தரிக்காய் அனுமதி மக்கள் உணர்வை மதிக்க முடிவு

**கொச்சி, பிப். 9–**

'மரபணு கத்தரிக்காயை அறிமுகப்படுத்தும் விஷயத்தில் மத்திய அரசின் முடிவு, மக்களின் உணர்வுகளை எதிரொலிப்பதாக இருக்கும்' என, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக இந்தியாவில் அறிமுகப்படுத்துவதற்கு, ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதையடுத்து, இதுகுறித்து நாடு முழுவதும் பொதுமக்களிடம் கருத்து கேட்கப்பட்டு வருகிறது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், ஒவ்வொரு மாநிலமாகச் சென்று, இதுகுறித்து கருத்துக்களை கேட்டு வருகிறார். கொச்சியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு பின், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக அறிமுகப்படுத்தும் விஷயத்தில், பொதுமக்களின் கருத்துகள் கேட்கப்பட வேண்டும். அதே நேரத்தில், அறிவியலுக்கும் தகுந்த மதிப்பு அளிக்க வேண்டும். நுகர்வோர், உற்பத்தியாளர்களின் கருத்துக்களையும் கேட்க வேண்டும். மேலும், கத்தரிக்காயில் பூச்சி மருந்து பயன்பாட்டை குறைப்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த விஷயத்தில் முடிவு எடுப்பது அத்தனை எளிதான விஷயம் அல்ல. நான் எடுக்கும் முடிவில், அனைத்து தரப்பினரும் திருப்தி அடைவர் என எதிர்பார்க்க முடியாது.

அதே நேரத்தில், மரபணு கத்தரிக்காயை அறிமுகப்படுத்துவதா, இல்லையா என்பது குறித்து அரசு சார்பில் எடுக்கப்படும் முடிவு, நாட்டு மக்களின் உணர்வுகளை எதிரொலிப்பதாக இருக்கும். இந்த விவகாரத்தில், நான் இரட்டை நிலையில் செயல்படுவதாக சிலர் புகார் கூறுகின்றனர். தயவு செய்து முடிவுக்காக காத்திருங்கள்.

மரபணு கத்தரிக்காயை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ம.பி., மாநில முதல்வர்கள் கடிதம் எழுதியுள்ளனர். தமிழக அரசு தலைமைச் செயலரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

**உழவர் சந்தைக்கு வாருங்கள் : வேளாண் அலுவலர் அழைப்பு**

விருத்தாசலம் : பொதுமக்கள் உழவர் சந்தைக்கு வந்து குறைந்த விலையில் காய்கறிகளை வாங்கி பயனடையுமாறு வேளாண் அலுவலர் கேட் டுக்கொண்டுள்ளார். இதுகுறித்து விருத்தாசலம் உழவர் சந்தை வேளாண் அலுவலர் நந்தினி விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விருத்தாசலம் உழவர் சந்தை தொடங்கப்பட்டு இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தினசரி சராசரியாக 50ம் குறைவில்லாத விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளையும் காய்கறிகள், கீரைகள், பழங்களை விற் கின்றனர். குறைந்த விலை, சரியான எடை விற்கப்படுவதால் அதிக அளவில் வாங்கி செல் கின்றனர். தற்போது நிறைய அளவில் உழவர் அடை யாள அட்டை கேட்டு விவசாயிகள் விண்ணப் பித்துள்ளனர். எனவே பொதுமக்கள் உழவர் சந்தையால் பயனடையுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**நெல் சாகுபடி குறித்த பயிற்சி**

அரூர்: அரூர் அடுத்த அச்சல்வாடி கிராமத்தில் நெல் பயிர் சாகுபடி குறித்து வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உழவர் வயல்வெளிப்பள்ளி பயிற்சி 30 க்கும் மேற்பட்ட  விவசாயிகளுக்கு வாரம் தோறும் வேளாண் துறை சார்பில் அளிக்கப்பட்டு வருகிறது. அச்சல்வாடியில் நடந்த பயிற்சியில் விவசாயிகள் குழு அமைத்தல், நெல் சாகுபடி முறை, செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள், வயல் சூழல் ஆய்வு கோனோவீடர் உபயோகம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறிக்கோல்கள், நன்மை தீமை செய்யும் பூச்சிகள் கண்காணிப்பு, உரம் மற்றும் நீர், களை  நிர்வாகம்.குழு விவாதம் ஒட்டுண்ணி விடல், உயிரியல் முறையில் பயிர் பாதுகாப்பு செய்தல் போன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நெல் பயிரில் அதிக மகசூல் பெற பயிற்சி அளிக்கப்பபட்டது.

**வரதமாநதி அணை நீர்மட்டம் குறைகிறது: விவசாயத்திற்கு தண்ணீர் வழங்குவதில் சிரமம்**

பழநி: வரதமாநதி அணை நீர்மட்டம் குறைந்து வருவதால் விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதில் சிரமம் உள்ளது. வரதமாநதி அணை மொத்த உயரம் 67 அடி. நேற்றைய நீர்மட்டம் 56 அடி.வினாடிக்கு 50 கன அடி தண்ணீர் விவசாயத்திற்கு திறந்து விடப்படுகிறது. ஜனவரியில் மழையில்லாததால் அணைக்கு நீர்வரத்தில்லை. எனவே பிப். 15 வரை மட்டுமே தண்ணீர் தொடர்ந்து வெளியேற்ற வாய்ப்புள்ளது. அதன்பின் குடிநீருக்காக அணைநீர் சேமிக்கப்படும்.விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடுவதில் சிரமம் ஏற்படும்.கிணற்று நீரை நம்பி விவசாயம் செய்ய விவசாயிகளுக்கு பொதுப்பணித்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

பிற அணைகள்: பாலாறு பொருந்தலாறு அணை மொத்த உயரம் 65 அடி. நேற்றைய நீர்மட்டம் 57 அடி. வினாடிக்கு 143 கன அடி நீர் விவசாயத்திற்கு வெளியேற்றப்படுகிறது. குதிரையாறு அணை நேற்றைய நீர்மட்டம் 73 அடி(மொத்த உயரம் 80அடி). விவசாய பணிக்கு தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

**பனி, பூச்சித்தாக்குதலால் கத்தரிக்காய் உற்பத்தி குறைவு கிலோவுக்கு ரூ. 10 ஒரே வாரத்தில் விலை உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: கடுமையான பனி மற்றும் பூச்சித் தாக்குதலால் கத்தரிக்காய் உற்பத்தி பெருமளவில் குறைந்துள்ளது. சென்ற வாரத்தை விட கத்தரிக்காய் விலை கிலோவுக்கு 10 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இந்தியாவை தாயகமாக கொண்ட கத்தரிக்காய் வெப்பம் அதிகம் பகுதிகளில் ஆண்டுதோறும் பயிரிடப்படுகிறது. வெப்பம் மிகுந்த, வடிகால் வசதி கொண்ட வண்டல் அல்லது களி கலந்த இருமண்பாட்டு நிலத்தில் கத்தரிக்காய் பயிரிடலாம். நிலத்தின் அமில, காரத்தன்மை 5.5-6.0 வரை இருந்தால் கத்தரிக்காய் மகசூல் அதிகமாக இருக்கும். இந்திய உணவு வகைகளில் கத்தரிக்காய், சாம்பார், பொறியல், கூட்டு உள்ளிட்ட பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. திருமணம் உள்ளிட்ட எந்த விசேஷமாக இருந்தாலும் கத்தரிக்காய்தான் உணவில் முதலிடத்தை பெறுகிறது. தமிழகத்தில் கோ- 1, கோ-2, எம்.டி.யூ., -1, அண்ணாமலை-1, பி.கே.எம்.-1, பாலூர்-1, கே.கே.எம்.-1 ஆகிய கத்தரிக்காய் ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இதில் கோ-2., ஒரு ஏக்கருக்கு 30 முதல் 35 டன் வரையிலும், கே.கே.எம்-1 ரகம் 36 டன் வரையிலும் மகசூலை தரவல்லது. திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் வெளிர்பச்சை, வெள்ளை, வெளிர் ஊதா ரகங்களும், ராமநாதபுரம், சிவகங்கையில் வெள்ளை நிற உருண்டை மற்றும் நீள உருண்டை ரகமும், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் வெள்ளை உருண்டை ரகமும், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, தஞ்சாவூரில் ஊதா உருண்டை மற்றும் ஊதா நீள உருண்டையும், வேலூர் மற்றும் திருவண்ணாமலையில் மேல்பகுதியில் முட்கள் கொண்ட ஊதா வரி ரக கத்தரிக்காய் பயிரிடப்படுகிறது.

ஈரோடு மற்றும் கோவை மாவட்டத்தில் முள்ளற்ற ஊதா வரி கொண்ட கத்தரிக்காய் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இதை "கண்ணாடி கத்தரிக்காய்' என்றும் அழைப்பர். மே- ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலும், டிசம்பர்- ஜனவரி முதல் மே மாதம் வரையிலும் கத்தரிக்காய் விளைச்சலுக்கு நல்ல சீஸன். ஒரு ஹெக்டேருக்கு 380 முதல் 400 கிராம் வரை கத்தரிக்காய் விதை பயன்படுத்தி செடி நடலாம். விதைத்த 40 அல்லது 45 நாளில் நாற்று நடலாம். நடவு செய்த 50வது நாளிலிருந்து அறுவடை செய்யலாம். கோபி, அத்தாணி, பொலவகாளிப்பாளையம், சிறுவலூர், கெட்டிசேவியூர், பாரியூர், புதுக்கரை புதூர், தண்ணீர்பந்தல்பாளையம், வடக்காலூர், தெக்காலூர், ஏரங்காட்டூர், வெள்ளாப்பாளையம் உள்ளிட்ட பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கத்தரிக்காய் நடவு ஆரம்பித்தது. வழக்கத்துக்கு காய் விடும் பருவத்தில் அதிளவில் பனி வீசுகிறது. பொதுவாக காய் விடும் பருவத்தில் பனி அல்லது மழை பெய்தால் கத்தரிக்காய் மகசூல் அதிளவில் பாதிக்கும். கோபி பகுதியில் தற்போது உள்ள அதிகப்பனி மற்றும் மூக்கு வண்டு, செம்பேன் போன்ற பூச்சி தாக்குதலால் கத்தரிக்காய் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.
திருமணம் உள்ளிட்ட சுப விசேஷ காலமாக இருப்பதால் கத்தரிக்காய்க்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால், வரத்து குறைவால் கத்தரிக்காய்க்கு விலையும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ கத்தரிக்காய் 15 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை விற்றது. தற்போது வரத்து குறைவால் ஒரு கிலோ கத்தரிக்காய் விலை 27 ரூபாய் வரை விற்பனையாகிறது.
"வரும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் அதிகளவில் நடக்க வாய்ப்புண்டு என்பதால், கத்தரிக்காய் விலை மேலும் உயரும்' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வைகை அணையில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தம்: சாவியாகும் நெற்பயிர்**

அழகர்கோவில்:வைகை அணையில் இருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டதால், நெற்பயிர் சாவியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.கள்ளந்திரி, அப்பன்திருப்பதி, மஞ்சம்பட்டி, சத்திரப்பட்டி பகுதிகளில் 50 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடி நிலங்களும், மாத்தூர், சுந்தரராஜன்பட்டி, திருப்பாலை, வீரபாண்டி பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஒருபோக சாகுபடி வசதியும் பெறுகின்றன. ஆண்டு தோறும் ஜூன் முதல் வாரத்தில் பேரணை முதல் கள்ளந்திரி வரை இருபோக சாகுபடிக்கும், செப்டம்பரில் மேலூர் பகுதி ஒருபோக சாகுபடிக்கும் கள்ளந்திரி கால்வாயில் தண்ணீர் திறப்பது வழக்கம். இந்த ஆண்டு வைகை அணையில் 5600 எம்.சி.எப்.டி., தண்ணீர் இருந்த நிலையில் அக்., 24ம் தேதி கள்ளந்திரி கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்று விவசாயப் பணிகளை துவக்குவதற்குள் ஒரு மாதம் ஆகிவிட்டது.

தண்ணீர் பற்றாக்குறையால், தற்போது 110 நாளில் பலன் அளிக்கும் நெல், பயிர் செய்யப்படுகிறது. தண்ணீர் திறக்கப்பட்ட இரு மாதங்களிலேயே முறை பாசனம் அமல் செய்யப்பட்டது. நெற்பயிர் கதிர் விடும் தருவாயில் உள்ளன. வைகை அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டதால் தண்ணீர் இன்றி நெற்பயிர் காயும் நிலை ஏற்பட்டுள்ளது.வெள்ளியங்குன்றம் விவசாயி ராஜராஜன்: ""ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்ய 11 ஆயிரம் வரை செலவாகிறது. தண்ணீர் தாமதமாக வந்ததால் தற்போதுதான் கதிர் விட்டுள்ளது. இன்னும் இரண்டு முறை தண்ணீர் வந்தால்தான் ஓரளவிற்கு விளைச்சல் இருக்கும். இல்லை என்றால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். வைகை அணையை தூர்வாரி கூடுதல் தண்ணீர் தேக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றார்.

மாத்தூர் விவசாயி அப்துல்சமது: ""ஆண்டு தோறும் இருபோக சாகுபடி செய்தேன். தண்ணீர் பற்றாக்குறையால் இந்த ஆண்டு ஒருபோகம் மட்டுமே சாகுபடி செய்ய முடிந்தது. அதுவும் முழு விளைச்சல் இல்லாமல் சாவியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கருகும் பயிரை காப்பாற்ற அரசு தண்ணீர் திறக்க முன்வரும் என்ற நம்பிக்கையில் உள்ளோம்,'' என்றார்.அப்பன்திருப்பதி பாசன நீர் பயன்படுத்துவோர் சங்க தலைவர் அருள்பிரகாசம் கூறியதாவது: அப்பன்திருப்பதி, மஞ்சம்பட்டி, சத்திரப்பட்டி, கள்ளந்திரி பகுதிகளில் 40 ஆயிரம் ஏக்கரில் ஒருபோக சாகுபடி செய்யப் பட்டுள்ளது. தண்ணீர் திறக்கப்பட்ட 45வது நாளில் முறை பாசனம் அமல் செய்யப்பட்டது.

தற்போது 10 சதவீதம் அறுவடை முடிந்தும், 20 சதவீதம் நெற்பயிர் அறுவடைக்கு தயாராகவும் உள்ளது. கண்மாயில் உள்ள தண்ணீர் மூலம் 20 சதவீத பயிரை காப்பாற்றலாம். இன்னும் இருமுறை தண்ணீர் திறந்தால் மீதமுள்ள 50 சதவீத பயிரை காப்பாற்ற முடியும். இல்லை என்றால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். விவசாயிகளை நஷ்டத்திலிருந்து காப்பாற்ற, மதுரையை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்க வேண்டும். அப்போது விவசாயக் கடன் தள்ளுபடி, நில, நீர் வரிகள் ரத்து செய்யப்படும். இதன் மூலம் விவசாயிகள் பாதிப்பிலிருந்து ஓரளவு பாதுகாக்கப்படுவர்.

**பசுமை புரட்சி ஏற்படுத்தினால் வெண்மை புரட்சி பெறலாம்:கால்நடை உதவி இயக்குனர் தகவல்**

மதுரை:""பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கினால், பால் உற்பத்தியில் வெண்மை புரட்சி அடையமுடியும்," என, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது :உலகளவில் பால் உற்பத்தியில், இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஆனால் பசுந்தீவன உற்பத்தியில் மிகவும் பின்தங்கியுள்ளோம். தற்போது நாட்டுரக பசுக்களுக்கு பதிலாக, உயர்கலப்பின ஜெர்ஸி, பெர்ஸியன் ரக பசுக்கள் தான் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராமப்புறங்களிலும் உயர்கலப்பின பசுக்கள் தான் அதிகம் வளர்க்கின்றனர்.

இவை ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 20 லிட்டர் பால் தரக்கூடியவை. அதற்கேற்ப, தீவனம் தரவேண்டியது முக்கியம். பெரும்பாலானோர், கலப்பினத் தீவனத்தை அதிகளவில் உணவாகத் தருகின்றனர். இதனால் பராமரிப்புச் செலவு அதிகமாகிறது. எனவே லாபம் குறைகிறது. இதற்கு மாற்று உணவு பசுந்தீவனங்கள் தான்.கோ-3, கோ- 4 ரக புற்களில் விட்டமின், தாதுக்கள், கார்பன் ஹைட்ரேட் சத்துக்களும், தட்டைப்பயறு, சோயா, காராமணி, குதிரைமசால், முயல்மசால், வேலிமசால் வகைகளில் புரோட்டீன் அதிகளவில் உள்ளன. புற்கள், பயறு வகைகளை உணவாகக் கொடுத்தால், கலப்பு தீவனத்தின் அளவை பாதியாக குறைக்கலாம். செலவும் குறையும்.

உயர்கலப்பின பசு ஒன்று வளர்த்தால், ஏழு சென்ட் நிலத்தில் பசுந்தீவனங்களை வளர்க்கலாம். நாள் ஒன்றுக்கு 20 - 25 கிலோ பசுந்தீவனங்களை கொடுத்தால் போதும். வீட்டுக்காக வளர்க்கப்படும் பசுவாக இருந்தால், கலப்புத் தீவனம் கொடுக்க வேண்டியதில்லை. பசுந்தீவனம் சமச்சீரான உணவு என்பதால், அதுவே போதும். இதை கொடுப்பதால், பசுக்கள் விரைவில் பருவமடையும். சினைப்பிடித்தலும் உடனடியாக ஏற்படும். சிக்கலின்றி கன்றுகள் பிறக்கும். பால் அதிகமாக சுரக்கும். நோய் தாக்கம் குறைவதுடன், நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கும். எனவே பசுந்தீவனங்களை அதிகம் வளர்ப்பதன் மூலம், பால் உற்பத்தியை அதிகரிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**வேளாண் தொழில்நுட்ப வார விழா: பெரம்பலூர் கலெக்டர் பங்கேற்பு**

பெரம்பலூர்: வேளாண் தொழில் நுட்ப மேலாண் முக மை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி மற்றும் வேளாண் தொழில்நுட்ப வார துவக்க விழா பெரம்பலூர் சமுக சேவை சங்க கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. முகாமில், வேளாண் தொழில்நுட்ப மேலா ண் முகமை திட்ட இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக உதவி பொது இயக்குநர் (பயிர் பாதுகாப்பு) ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். முகாமை கலெக்டர் விஜயகுமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் வரதராஜன், பெங்களூரூ இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக எட்டாவது மண்டல திட்ட இயக்குநர் பிரபுகுமார், தேசிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் பாம்பவாலே ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று பேசினர். முகாமில் கோவை வேளாண் பல்கலை

விரிவாக்க கல்வி இய க்குநர் கலைச்செல்வன், வேளா ண் துணை இயக்குநர் சிவக்குமார், ரோவர் கல்லூரி முதல்வர் ஜேம்ஸ்பிச்சை, வேளாண் து ணை இயக்குநர் விஜயகுமார், வட்டார விவசாய ஆலோசனை க்குழு தலைவர் செல்லமுத்து உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

கமுதி: மிளகாய் பயிருக்கு இழப்பீடு வழங்க கோரி பெருநாழியில் தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் அரசுபாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் சித்தையா பெருநாழி வட்டார தலைவர் ரசூல்மைதீன், செயலாளர் துரைப்பாண்டி, ஒன்றிய செயலாளர்கள் ராமசாமி, மாரிச்சாமி உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**உளுந்து பயிருக்கு விவசாயிகள் கடன் பெற 15ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்தி பயன்பெறலாம்**

தஞ்சாவூர்: உளுந்து பயிறுக்கு கடன் பெறாத விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள் பிரிமியம் செலுத்திபயன் பெறவேண்டும் என்று பயிர் காப்பீட்டு திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பழனியப்பன் தெரிவித்து உள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: பயிர்காப்பீட்டுத் திட்டத்தில் தற்போது நடைமுறையில் தனிப்பட்ட விவசாயிகளின் பாதிப்பிற்கோ, தனிபட்ட கிராமத்தின் பாதிப்பிற்கோ இழப்பீடு வழங்க வகையில்லை. மாவட்டத்தில் 10 முதல் 25 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு தாலுகாவில் 10 இடங்கள் வேளாண்மைத்துறை மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்கள் மேற்பார்வையில் பயிர் அறுவடை சோதனை நடத்தப்படும். இந்த சோதனையில் கிடைக்கும் மகசூல் விபரத்தோடு அதற்கு முந்திய 3 ஆண்டுகளின் சராசரி மகசூல் ஒப்பிட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு தாலுகாவிற்கும் இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்படும்.

இந்த ஆண்டில் பயிர் அறுவடை சோதனைகள் அரசின் வழிகாட்டுதலுக்கு உட்பட்ட சிறந்த முறையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் அனைத்து சோதனை வயல்களும் அறுவடை செய்த பின் மாநில வேளாண் ஆணையர் மூலம் பயிர் காப்பீட்டு நிறுவனம்சென்னை மண்டல அலுவலகத்திற்கு அனுப்பப்படும். இதன் பின் டெல்லியில் உள்ள தலைமை அலுவலக ஒப்புதலோடு வட்டார அளவிலான இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்படும். உளுந்து பயிறுக்கு கடன் பெறாத விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள்ளும், கடன் பெறும் விவசாயிகள் வரும் மார்ச்31ம் தேதிக்குள்ளும் பிரிமியம் செலுத்த வேண்டும்.இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வல்லம் பகுதியில் களை எடுக்கும் பணி மும்முரம்**

வல்லம்: வல்லம் பகுதியில் கோடை காலப் பயிர்களுக்கு களை எடுத்தல் பணியை விவசாயிகள் மும்முரமாக செய்து வருகின்றனர்.

வல்லம் பகுதியில் கோடை காலப் பயிர்களாக ஆழ்குழாய் கிணற்று பாசன விவசாயிகள் எள், கடலை, சோளம், உளுந்து, சூரியகாந்தி போன்ற பயிர்களை பயிரிட்டுள்ளனர். ஏரிப்பாசன விவசாயிகள் நெல், உளுந்து, கடலை போன்ற பயிர்களையும், டீசல் இன்ஜின் மூலம் விவசாயம் செய்யும் விவசாயிகள் எள், கடலை, மிளகாய், உளுந்து போன்ற பயிர்களை பயிரிட்டுள்ளனர். இப்பயிர்களுக்கு தற்போது களை எடுக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு கூலியாக ரூ.30 கொடுக்கப்பட்டது. தற்போது 100 நாள் வேலை திட்டத்தால் களை எடுக்க கூலியாக ரூ. 60 முதல் 70 வரை கொடுக்க வேண்டியுள்ளது.

தவிர களை எடுக்கும் பணிக்கும் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.ஆள் பற்றாக்குறையால் பயிர்களில் களைகள் அதிகளவில் மண்டி கிடப்பதாகவும், விவசாயப் பணிகளை கடந்த

காலங்கள் போன்று நிம்மதியாக செய்ய முடியவில்லை என்றும் விவசாயிகள் புலம்புகின்றனர். அதிகளவில் விவசாயிகள் கூலி கொடுத்தாலும் ஆட்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. இதனால் 10 ஏக்கருக்கு மேல் கூடுதலாக நிலம் உள்ள விவசாயிகள் 5 அல்லது 10 ஏக்கர் அளவில் மட்டும் விவசாயப்பணிகள் செய்துக் கொண்டு மற்ற நிலங்களில் சவுக்குக் கன்றுகளை மகசூல் செய்து வருகின்றனர். கால சூழ்நிலைகள் எப்படி இருந்தாலும் சில பகுதிகளில் வழக்கம் போல் விவசாயப் பணிகள் நடந்து வருகிறது. அந்த வகையில் வல்லம் பகுதியில் எப்போதும் போன்று கோடைக் காலங்களில் பயிரிடப் படும் பயிர்கள் இந்தாண் டும் பயிரிடப்பட்டு உள்ளன. அந்த பயிர்களுக்கு தற்போது களை எடுக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**கறவை மாடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

துறையூர்:துறையூர் அருகே கண்ணனூர் ஊராட்சியில் நபார்டு வங்கி, ஷாலோம் பவுண்டேசன் தொண்டு நிறுவனம் ஆகியவை சார்பில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு 10 நாட்கள் கறவைமாடு வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது.முகாம் நிறைவில் பயிற்சி பெற்ற 33 பெண்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு நபார்டு வங்கி திருச்சி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சாலமன் பால்ஜெயராஜ் தலைமை வகித்தார். ஷாலோம் பவுண்டேசன் மேனேஜிங் டிரஸ்டி வங்கி முதுநிலை மேலாளர் மாணிக்கம், கண்ணனூர் அரசு கால்நடை உதவி மருத்துவர் யோகேஸ்வரி, ஊராட்சி தலைவர் சுப்ரமணியன், ஏகேஎம் டிரஸ்ட் நிர்வாகி ராஜாசிதம்பரம், அன்னை டிரஸ்ட் நிர்வாகி பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஏற்பாடுகளைஷாலோம் பவுண்டேசன்ஸ் களப்பணியாளர்கள் கண்ணன், சரவணன், சிவா, தமிழ்செல்வி, ராதா ஆகியோர் செய்திருந்தனர். ஷாலோம் பவுண்டேசன்ஸ் திட்ட இயக்குனர் ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.

எதிரணிக்கே பலம்:மணிகண்டம் யூனியனில் மொத்தம் 14 கவுன்சிலர்கள் உள்ளனர். இதில் சேர்மனையும் சேர்த்து திமுக 7, துணைத் தலைவரையும் சேர்த்து காங்கிரஸ் 2, தேமுதிக 2, அதிமுக 1, இந்திய கம்யூ. 1, சுயேட்சை 1 என்ற எண்ணிக்கையில் கவுன்சிலர்கள் உள்ளனர். இதில் துணைத் தலைவர் சுந்தரம் தலைமையில் திமுகவில் 5 பேரும், காங்கிரசில் 2 பேரும், தேமுதிக 2 பேரும், இந்திய கம்யூ. ஒருவரும் என்று சேர்மன் செங்குட்டுவனுக்கு எதிரணியில் உள்ளனர். திமுக கவுன்சிலர் ஒருவர் மட்டுமே சேர்மன் ஆதரவாளராக உள்ளார். இதுதவிர அதிமுக, சுயேட்சை ஆகிய இருவரும் தனியாக உள்ளனர். இதனால் யூனியன் கூட்டத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் மீது ஓட்டெடுப்பு நடத்தினால் செங்குட்டுவன் தோல்வியடைவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக திமுக கவுன்சிலர்கள் தெரிவித்தனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில்15ம் தேதி முதல் தொழில்நுட்ப வார விழா**

நீடாமங்கலம்:நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15ம் தேதி முதல் 5 நாட்களுக்கு தொழில் நுட்ப வாரவிழா நடக்கிறது.

இதுகுறித்து அறிவியல் நிலைய தலைவர் செங்குட்டுவன் கூறியதாவது:வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15ம் தேதி முதல் 19ம் தேதி வரை 5 நாட்களுக்கு தொழில் நுட்ப வார விழா நடக்கிறது. இதில் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர், வேளாண் துறை, தோட்டக்கலை துறை, கால்நடை துறை, வனத்துறை அதிகாரிகள் பங்கேற்று விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர். விழா நடக்கும் 5 நாட்களிலும் தினமும் கருத்தரங்கு, செயல்விளக்கம் நடக்கிறது.

முதல் நாள் செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள், நெல், கரும்பு பயிர்களில் நடவு முதல் அறுவடை வரை பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், இரண்டாம் நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, உர நிர்வாகம், மூன்றாம் நாள் துல்லிய பண்ணையம், மாற்று பயிர் திட்டம், நான்காம் நாள் ஆடு, கோழி, மீன் வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது. ஐந்தாம் நாள் விவசாயிகளின் அனுபவ பரிமாற்றத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.பல்வேறு துறைகள் பங்கேற்கும் கருத்து காட்சியும்

இடம்பெறுகிறது. எனவே திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த திரளான விவசாயிகள் இதில் பங்கேற்க கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

திருவாரூர்:கொரடாச்சேரி அருகே ஆய்குடியில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.கொரடாச்சேரி தாலுகாவைச் சேர்ந்த ஆய்குடி, எண்கண், அத்திசோழமங்கலம், நட்டுவாக்குடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆய்குடியில் விதை கிராமத் திட்ட பயிற்சி வழங்கப்பட்டது. கொரடாச்சேரி வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி பயிற்சியை தொடங்கி வைத்து பேசுகையில், விவசாயிகள் தரமான விதையை பயன்படுத்துவதன் மூலம் 15 முதல் 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற முடியும். அதற்கு விதை தரமானதாகவும், தனது பாரம்பரிய இனங்களில் இருந்து சிறிதும் குறையாமல் இருக்க வேண்டும். பிற ரக விதை நெல் கலப்பு இல்லாமலும், பூச்சி மற்றும் பூஞ்சாணங்களால் தாக்கப்படாமலும், தூசி மற்றும் மண் இல்லாமலும், நல்ல முளைப்புத்திறன் கொண்டாதாகவும் இருக்க வேண்டும். இதற்கு விவசாயிகள் தாங்களாகவே தரமான விதையை உற்பத்தி செய்து கொண்டு தாங்கள் பயன்படுத்துவதுடன் மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்றார்.

வேளாண்மை துணை இயக்குனர் கபிலன் பேசுகையில், விவசாயிகள் தாங்களே விதையை உற்பத்தி செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளை பெற வேண்டும். மேலும் விவசாயிகள் அரசின் மானியத்திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். வேளாண்மை அலுவலர் உத்திராபதி, மாவட்ட கவுன்சிலர் அன்பழகன், ஆய்குடி பஞ்., தலைவர் உத்திராபதி உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.உதவி வேளாண் அலுவலர் வேல்முருகன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை கொரடாச்சேரி வேளாண் அலுவலர் பாருக், உதவி வேளாண் அலுவலர்கள் குமணன், ராஜ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

**பி.டி.மரபணு கத்திரிக்காய்க்கு தடை : நெல்லையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

திருநெல்வேலி : பி.டி.மரபணு கத்திரிக்காயை தடை செய்ய வலியுறுத்தி நெல்லையில் விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.
தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கருணாநிதி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் கருமலையான் துவக்கவுரை ஆற்றினார். விவசாய சங்க தலைவர் கணபதி, பொருளாளர் நல்லசாமி, கிளை செயலாளர்கள் கண்ணன், ராமகிருஷ்ணன், தமோதிரன், முத்துராஜ், சி.ஐ.டி.யு.தலைவர்கள் சுடலைராஜ், ராஜகோபால், பாலு, முருகன், பீடித் தொழிலாளர்கள் சங்கம் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஜெயராஜ் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

**சிறுதானிய பயிர்கள் தொழில்நுட்ப பயிற்சி**

கீழ்பென்னாத்தூர்: கீழ்பென்னாத்தூர் ஒன் றிய விதை கிராம திட் டத்தின் கீழ் எண்ணெய்வித்து மற்றும் சிறுதானிய பயிர்களின் உற்பத்திக்கான தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

நாரியமங்கலம், கொளத்தூர், நாடழகானந்தல், வைப்பூர், ராயம்பேட்டை ஆகிய கிராமங்களில் இருந்து தலா 50 விவசாயிகள் வீதம், 250 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு விதைத்தேர்வு, விதை உற்பத்தி முறைகள், விதைச்சான்று நடைமுறைகள், விதை உற்பத்திக்கான மானியங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமில், விதை கிராம திட்டம் மற்றும் அவற்றை செயல்படுத்தும் முறை குறித்தும் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் வீரமணி, எண்ணெய் வித்து மற்றும் சிறுதானிய பயிர்களின் உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து கீழ் பென்னாத்தூர் வேளாண் மை உதவி இயக்குனர் ரமணன், விதைச்சான்று நடைமுறைகள், பயிர்களில் பூச்சிநோய் தாக்குதல், அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விதைச்சான்று அலுவலர் செல்வராஜ் மற்றும்

வேளாண்மை அலுவலர் முத்துராம் விரிவாக கூறினர். அந்தந்த பகுதியை சேர்ந்த உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

**கரடிகுடி விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி**

அணைக்கட்டு: கரடிகுடி கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சிவக்குமார் சிங் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் முருகன் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ரங்கநாதன் வரவேற்றார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் காண்டீபன், ஜெயபால், வையாபுரி, மகாலிங்கம் ஆகியோர் பயிற்சியளித்தனர். அப்போது நெல் மற்றும் பயிர் வகைகளில் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து தொழில் நுட்பங்கள் பற்றியும், உயிர் உரங்களின் பயன்பாடுகள், அவற்றால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மேலும் செம்மை நெல் சாகுபடி குறித்தும் செயல்முறைகளுடன் விளக்கப்பட்டது. பயிற்சியில் கரடிகுடி பகுதி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**சுவீடன் நாட்டு பல்கலை மாணவிகள் வெள்ளக்குளம் கிராமத்தில் ஆராய்ச்சி**

திண்டிவனம் : சுவீடன் நாட்டிலுள்ள ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவிகள் 16 பேர், கடந்த மாதம் 25ம் தேதி முதல் திண்டிவனம் மற்றும் மரக்காணம் பகுதியில் படிப்பு தொடர் பான ஆராய்ச்சிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் அனிக்கா, ஸ்டீனா தலைமையில் வந்த இக்குழுவினர் மரக்காணம் பகுதியிலுள்ள மீனவர்கள் வாழ்க்கை முறை, கல்வி நிலை மற்றும் சுனாமி மறுவாழ்வு குறித்து கேட்டறிந்தனர்.கரசானூர் கிராமத்திலுள்ள மக்களை நேரடியாக சந்தித்து நடைமுறையிலுள்ள மதவழிபாடுகள், கலாசாரம் குறித்து கேட்டனர். மரக்காணம் பகுதி கிராமங்களில் வசிக்கும் பெண் களிடம், அவர்களுக்குள்ள உரிமைகள், பெண் குழந் தைகள் மற்றும் குழந்தை தொழிலாளர்களின் நிலை குறித்த கருத்துக்களையும், தமிழகத்திலுள்ள அரசு திட் டங்கள் குறித்த விவரங்களையும் கேட்டறிந்தனர். முகாம் நிறைவு நாளான நேற்று காலை வெள்ளக்கு ளத்திலுள்ள கிராம சமுதாய முன்னேற்ற சங்கம் (விசிடிஎஸ்) ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில், சுவீடன் மாணவிகள் கலந்து கொண் டனர். சங்கத்தின் தலைவர் மார்ட்டீன் தலைமை தாங்கினார். பேராசிரியர் குணசேகரன் இந்தியாவிலுள்ள மதங்கள் மற்றும் வரலாற்று சம்பவங்கள் குறித்து விளக்கமளித்தார். இதேபோல், பேராசிரியர் கோவிந்தசாமி தலைமையில் மாணவிகளுக்கு யோகாசனம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. "மாறி வரும் இந்தியாவில் நாம்' என்ற தலைப்பில் விவாதமும் நடந்தது.

தினகரன்

**பஞ்சு விற்பனைக் கூடங்கள்**

பதிவு செய்த நாள் 2/9/2010 12:55:35 AM




கோவை : தமிழக பஞ்சாலைகளுக்காக இந்திய பருத்திக் கழகம் மூலம் கோவையில் அமைக்கப்பட்டுள்ள பஞ்சு விற்பனைக் கூடத்தை மத்திய அமைச்சர் தயாநிதிமாறன் நேற்று துவக்கி வைத்தார். ராஜபாளையத்திலும் பஞ்சு விற்பனைக்கூடம் துவங்கப்பட்டுள்ளது.

தமிழக பஞ்சாலைகளுக்கு உதவும் வகையில், கோவை, ராஜபாளையத்தில், இந்திய பருத்திக் கழகம் சார்பில் பஞ்சு விற்பனைக் கூடங்கள் நேற்று துவங்கப்பட்டன. இதன் துவக்க விழா, கோவை தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகத்தில் நடந்தது.  இந்திய பருத்திக்கழக தலைவர் சுபாஷ் குரோவர் வரவேற்றார். மாநில அமைச்சர்கள் பொங்கலூர் பழனிச் சாமி, சாத்தூர் ராமச்சந்திரன், இந்திய பருத்தி ஜவுளி கூட்டமைப்பின் துணைத் தலைவர் ஆறுமுகம், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்க(சைமா) தலைவர் துளசிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விற்பனைக் கூடத்தை துவக்கி வைத்து, மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதிமாறன் பேசியதாவது:

நாட்டிலேயே முதன்முறையாக, விற்பனைக் கூடங்கள் மூலம் பருத்தி விற்பனை செய்யும் திட்டம் கோவை, ராஜபாளையத்தில் துவக்கப்பட்டுள்ளது. இந்த துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்ற போது, பஞ்சு தட்டுப்பாடு குறித்து தென்னிந்திய பஞ்சாலை சங்க நிர்வாகிகள் என் கவனத்துக்கு கொண்டு வந்தனர். குஜராத்தில் இருந்து தமிழக துறைமுகங்களுக்கு கப்பல் மூலம் பஞ்சு கொண்டு வருவதாக இருந்தாலும் கூடுதல் செலவு ஏற்படும். இதனால், பெரிய மில்களுக்குதான் பயன் அளிக்கும். எனவே, சிறிய நடுத்தர மில்கள் பயன்பெறும் நோக்கில், கோவை, ராஜபாளையத்தில் பருத்தி விற்பனை கூடங்கள் துவக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் செய்யும் பஞ்சுக்கான விற்பனை வரியில் 2 சதவீதத்தை பருத்திக்கழகமே ஏற்றுக்கொள்கிறது. தமிழக முதல்வரிடம் பேசி, பருத்திக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் பஞ்சுக்கு நடைமுறையில் இருந்த 4 சதவீத மதிப்பு கூட்டு வரியில் இருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தை போல் மற்ற மாநிலங்கள் இதற்கு முன் வந்தால், தேவையான இடங்களில் பஞ்சு விற்பனைக்கூடங்கள் அமைக்க தயாராக உள்ளோம்.

ஜவுளி தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்தில் (டப்) அதிக பலன், தமிழகத்துக்குதான். 1999ம் ஆண்டு திட்டம் துவக்கப்பட்டதில் இருந்து வழங்கப்பட்ட மானியம் ரூ.67,221 கோடியில், தமிழக ஆலைகள் பெற்றது ரூ.18,933 கோடி. அதாவது, 28% தமிழகத்துக்கு கிடைத்துள்ளது.

பஞ்சாலைகளுக்கு மின் பற்றாக்குறை இருப்பதாக உரிமையாளர்கள் தெரிவித்தனர். கர்நாடகத்தில் 60 சதவீதம் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு உள்ளது. ஆந்திரா, மகாராஷ்டிராவிலும் இதே நிலைதான். தமிழகத்தில் 20 சதவீத மின்வெட்டுதான். அதற்கு தீர்வு காணும் வகையில் முதல்வர், துணை முதல்வர், மின்துறை அமைச்சருடன் கலந்துபேசி வெளி மாநிலத்தில் இருந்து யூனிட் ரூ.7.20க்கு மின்சாரம் கொள்முதல் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

டெல்லியில் நடந்த முதல்வர்கள் மாநாட்டில் துணை முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். திருப்பூர் சாய ஆலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்தை செயல்படுத்த மாநில அரசு ரூ.120 கோடி ஒதுக்குவதாகவும், மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.240 கோடி ஒதுக்க வேண்டும் என்றும் துணை முதல்வர் வலியுறுத்தினார். அதேபோல், கிருஷ்ணா& கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயுவை தமிழகத்திற்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கடலூரில் ‘சைமா’ சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஜவுளி பதனிடும் தொழிற்பூங்காவில் கழிவு நீரை சுத்திகரித்து கடலில் கலக்கும் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெற்றுள்ளனர். அத்திட்டத்தை சைமா அமைப்பினர் நிறைவேற்ற முன்வரவேண்டும்.

தற்போது துவக்கப்பட்டுள்ள நேரடி பருத்தி விற்பனை திட்டத்தால் பஞ்சாலைகளுக்கு உற்பத்தி செலவு ஒரு கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.3 வரை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். லாப நோக்கத்தை கைவிட்டு இதன் மூலம் பின்னலாடை தொழிலுக்கு குறைந்த விலையில் நூல் கொடுப்பது மூலம் ஆடை தயாரிப்பாளர்கள் பயனடைவர். அதேபோல் கழிவு பஞ்சை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை தவிர்த்து ஈரோடு பகுதியில் உள்ள சிறு நெசவாளர்களுக்கு(பஞ்சு மேட் தயாரிப்பாளர்கள்) வழங்க முன் வரவேண்டும்.

பஞ்சாலை அதிபர்கள் இத்தகைய சமூக பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் தமிழகத்தில் ஒட்டுமொத்த ஜவுளி தொழிலும் மேம்பட்டு, வேலை வாய்ப்பு அதிகரிக்கும். இவ்வாறு தயாநிதிமாறன் பேசினார்.
முதல் விற்பனையை ராஜபாளையம் லாயல் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் மாணிக்கம் ராமசுவாமி, உடுமலை சண்முகராஜா டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சோமசுந்தரம் பெற்றுக்கொண்டனர். மேயர் வெங்கடாசலம் மற்றும் பஞ் சாலை உரிமையாளர்கள் பங்கேற்றனர்.

தினத்தந்தி

### நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக அதிகரிக்கும் என மத்திய அரசு மதிப்பீடு செய்துள்ளது. இது, சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில் 6.7 சதவீதமாக இருந்தது.

உணவு உற்பத்தி

வறட்சி மற்றும் வெள்ளம் காரணமாக, சென்ற கரீஃப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி குறைந்துள்ளது. இதனையடுத்து, சென்ற நிதி ஆண்டில் 1.6 சதவீதமாக வளர்ச்சி அடைந்திருந்த வேளாண் உற்பத்தி, நடப்பு நிதி ஆண்டில் 0.2 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தயாரிப்புத் துறையில் ஏற்பட்டு வரும் அதிவேக வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்துசக்தியாக திகழ்கிறது.

பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்திடும் வகையில், மத்திய அரசு ரூ.1.86 லட்சம் கோடி மதிப்பிற்கு மூன்று முறை சலுகை திட்டங்களை வழங்கியது. இதனையடுத்து, மோட்டார் வாகனங்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் உள்ளிட்ட நுகர்வோர் சாதனங்கள் விற்பனை அதிகரித்து வருகிறது. இதனையடுத்து, சென்ற நிதி ஆண்டில் 3.2 சதவீதம் வளர்ச்சி அடைந்திருந்த தயாரிப்புத் துறையின் உற்பத்தி, நடப்பு நிதி ஆண்டில் வியக்கத்தக்க வகையில் 8.9 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில், தொழில் துறை உற்பத்தியில் இரட்டை இலக்க வளர்ச்சி (11.7 சதவீதம்) ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால், நடப்பு நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக்சிங் அலுவாலியா கூறும்போது, “மத்திய அரசு வழங்கியுள்ள சலுகைகளுக்கு உரிய பலன் கிடைத்துள்ளது. நிதி பற்றாக்குறை, நடப்பு நிதி ஆண்டில் குறைந்துவிடும். வரும் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக உயரும்” என்று தெரிவித்தார்.

நிதி அமைச்சகம்

நடப்பு நிதி ஆண்டின் இரண்டாவது காலாண்டில், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.9 சதவீதமாக உயர்ந்து இருந்தது. இதனையடுத்து, மத்திய நிதி அமைச்சகம், பொருளாதார ஆய்வு அறிக்கையில், நடப்பு நிதி ஆண்டில் பொருளாதாரத்தில் 7.75 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என மதிப்பிட்டு இருந்தது. பாரத ரிசர்வ் வங்கியும் அதன் கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் 7.5 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என்று முன்னறிவிப்பு செய்து இருந்தது.

இந்நிலையில், மத்திய புள்ளியியல் அமைப்பு, நடப்பு நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்துள்ளது. ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைவதற்கு முன்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறித்து, மத்திய புள்ளியியல் அமைப்பு முன்கூட்டியே மதிப்பீடு செய்கிறது. இது, மத்திய அரசு பட்ஜெட்டை வெளியிடும்போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி பற்றாக்குறை எந்த அளவிற்கு உள்ளது என்பன போன்ற மதிப்பீடுகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

### உள்நாட்டில், முக்கிய சந்தைகளில் சீரகம், மஞ்சள் விலை சரிவு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
கொல்கத்தா
உள்நாட்டில் முக்கிய சந்தைகளில் சீரகம் மற்றும் மஞ்சள் ஆகிய நறுமணப் பொருள்களின் விலை சரிவடைந்துள்ளது.

ஈரோடு மாவட்டம்

மஞ்சள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஆந்திர மாநிலம் நிஜாமாபாத் மற்றும் தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. நிஜாமாபாத்திலிருந்து சந்தைகளுக்கு வரும்

மஞ்சள் விலை குவிண்டால் (100 கிலோ) ஒன்றுக்கு விலை ரூ.162 குறைந்துள்ளது. இதே போன்று ஈரோடு மாவட்டத்தில் ஒரு குவிண்டால் நடுத்தர வகை மஞ்சள் விலை ரூ.200 சரிவடைந்துள்ளது. இங்கு தற்போது ஒரு குவிண்டால் மஞ்சள் விலை சுமார் ரூ.10,450 என்ற அளவில் உள்ளது. தற்போது ஈரோடு சந்தைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 6,000 மூட்டை மஞ்சள் வந்து கொண்டுள்ளது. நடப்பு பருவத்தில் நாட்டின் மஞ்சள் உற்பத்தி 47 லட்சம் டன் அளவிற்கு இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம்

சீரகம் உற்பத்தியில் குஜராத் மாநிலம் உன்ஜா பகுதி முதலிடத்தில் உள்ளது. இங்கு ஒரு குவிண்டால் சீரகம் விலை ரூ.123 குறைந்து ரூ.12,267–ஆக சரிவடைந்துள்ளது. உள்ளூர் மண்டிகளுக்கு சீரகம் வரத்து படிப்படியாக குறைந்து வரும் நிலையிலும் இதன் விலை குறைந்து காணப்படுகிறது என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. சென்ற வார இறுதியில் 1,000 மூட்டை சீரகம் மண்டிகளுக்கு வந்தது. இது, முந்தைய வாரத்தில் 4,000 மூட்டைகளாக இருந்தது. ஒரு மூட்டை என்பது 70 கிலோ சீரகம் கொண்டதாகும்.

நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் சீரகம் உற்பத்தி 23 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் 25 லட்சம் மூட்டைகளாக இருந்தது. முந்தைய பருவம் 12 லட்சம் மூட்டைகள் கையிருப்புடன் தொடங்கிய வேளையில், நடப்பு பருவம் 5 லட்சம் மூட்டைகளுடன் தொடங்கியது.